தலைவர்
விளங்கம்பாடி ஊராட்சி மன்றம்
மயிலம் ஊராட்சி ஒன்றியம்.

விளங்கம்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.ந. உத்திரமணி

தீர்மான எண்.07 /2024 நாள். 10.5.2024

பொருள் : மனைப்பிரிவு - மைலம் ஊராட்சி ஒன்றியம் - விளங்கம்பாடி கிராமம் - புதிய சர்வே 86/6C1A, 86/6C1B-ல் 3.05 செண்டு (அ) 12350 ச.மீ பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் - சார்பு.

பார்வை :

1. மனுதாரர் திரு. ஆனந்த் மற்றும் திரு. சுரேஷ்குமார் ஆகியவர்களின் விண்ணப்ப நாள்.02-02-2024 (Online Application No.N7SY5RH8, File No.7982/2022/TCP)
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் இறுதி ஒப்புதல் அனுமதி எண்.ம.வ./ந.ஊ.உ.இ.(வி.மா)எண்.77/2024,
3. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.4.2.2019, மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.1.2020.
4. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.4.5.2017.
5. அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை UD4(3) நாள்.23.09.2020.
6. அரசானை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை UD4(1) நாள்.09-12-2020.
7. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.30.8.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.8.9.2017.
9. இவ்வூராட்சி மன்றத் தீர்மான எண். 07/2024 நாள். 10-05-2024

உத்தரவு:

பார்வையில் கண்ட 1 முதல் 8 வரையுள்ள நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படியும் அரசாணையின் படியும் பார்வை 9-ல் கண்ட இவ்வூராட்சியின் தீர்மானத்தின்படியும் விளங்கம்பாடி கிராமம் - புதிய சர்வே 86/6C1A, 86/6C1B-ல் 3.05 செண்டு (அ) 12350 ச.மீ பரப்பளவு கொண்ட சன் சிட்டி குடியிருப்பு மனைப்பிரிவில் மனை எண்கள் 1 முதல் 73 வரை உள்ள மனைகளை விற்பனை செய்வதற்கும் பதிவு செய்வதற்கும் (Registration) கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள்படி அனுமதி அளிக்கப்படுகிறது.

1. நகர ஊரமைப்பு துறை (வி) அவர்களின் கோப்பு எண்.77/2024, வீமா2, நாள்.18-04-2024ன்படி மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 9 வரை உள்ளவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.

2. சாலையின் இருபுறமும் நிழல்தரும் மரங்கள் நடப்பட வேண்டும்.

3. மனைப்பிரிவில் உள்ள அனைத்து சாலைகளும் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

4. ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது இடத்தில் எந்த ஒரு அத்து மீறலும் செய்யக்கூடாது. (ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆவண எண்.1227/2024, நாள்.01-04-2024, பிரிவு A உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. 50.20 சதுர மீட்டர், பிரிவு B மின்சார துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. 58.70 சதுர மீட்டர்) மற்றும் பூங்காவிற்காக ஒப்படைப்பு செய்யப்பட்டது 915.40 சதுர மீட்டர்கள் ஆகும்.
5. சாலையின் இருபுறமும் வடிகால் வசதி செய்யப்பட வேண்டும்.

6. ஒவ்வொரு மனையிலும் வீடு கட்டும்போது ஊராட்சி மன்றம் மற்றும் நகர ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களிடம் அனுமதி பெற்று வீடு கட்ட வேண்டும்.

மேற்கண்ட சிறப்பு நிபந்தனைகள்படி மனைப்பிரிவு அனுமதி (LAYOUT APPROVAL) அளிக்கப்படுகிறது.

தலைவர்
விளங்கம்பாடி ஊராட்சி மன்றம்
மயிலம் ஊராட்சி ஒன்றியம்.

தலைவர்
விளங்கம்பாடி ஊராட்சி
திண்டிவனம் வட்டம்.

நகல் 1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. நகர ஊரமைப்புத் துறை இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர் பதிவுத்துறை, மைலம் அவர்களுக்கு மனைகளை பதிவு செய்வதற்கு அனுப்பப்படுகிறது.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

வரைபட அனுமதி நகல் 3 நகல்.

பெறுதல்

திரு. ஆனந்த், மற்றும் சுரேஷ்குமார்,
நெ.4எ, சௌபாக்கியா அபார்ட்மெண்ட்,
வள்ளலார் சாலை,
காமராஜ் நகர், புதுச்சேரி